Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா; 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 3 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆனி 16 | 30 - 06 - 1992 | செவ்வாய்க்கிழமை | ஓசை 133

## "அனுமதியில் மாற்றம் ஆயுதம் ஏந்தத் தூண்டும்"

"அனுமதியில் மாற்றம் ஆயுதம் ஏந்தத் தூண்டும்" இது பல்கலைக்கழக அனுமதி முறையைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது மாணவர்களால் உரத்த குரலில் எழுப்பப்பட்ட கோஷங்களில் ஒன்று. இவ் ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட கோஷங்களில் சில பின்வருமாறு: "கையை தே கைவையாதே மாணவர் கல்வியில் கைவையாதே", வெட்டுப்புள்ளி என்பன தமிழர் தலைகளை வெட்டவா, கொட்டுமுறாக உனது கொட்டம் அடக்கும் எமது பேனாக்களும் குண்டுகளைக் கக்கும், கட்டையில் போகும் போது வெட்டுப் புள்ளியில் மாற்றமா? பஞ்சணையில் படுக்கவில்லை, பங்கரில் தான் பாடம் படித்தோம்.

## புல்லாவெளியில்

# புலிகளின் உக்கிர தாக்குதலால்

# சிங்களபடையணிகள் நிலைகுலைவு

### பருத்தித்துறைக்கு கொண்டுவர முயற்சி

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுகத்தில் தற்போது தங்கியுள்ள மொனினான் கப்பலிலிருந்து உணவுப் பொருள்கள் இறக்கும் வேலை எதுவும் நடைபெறவில்லை என்றும், அக்கப்பலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு கொண்டுவர முயற்சி நடைபெறுவதாகவும் தெரியவருகிறது. இதனிடையே மேக்ஸ் குடணா என்ற கப்பல் ஜூலை ஏழாம் திகதி யன்று கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி புறப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

### சாவகச்சேரிப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

#### ஒரு பொதுமகன் பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட விமானத் தாக்குதலால் அப்பாவிப் பொதுமகனொருவர் பலியானார். சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை பலத்த சேதமடைந்தது. ஆறிற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தன.

இச்சம்பவம் நேற்று மாலை 5 30 மணியளவில் நிகழ்ந்துள்ளது. சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இத்தாக்குதலை மேற்கொண்டு ஐந்து குண்டுகளை வீசின. சாவகச்சேரி இந்து கல்லூரியைச் சூழவுள்ள பகுதிகளிலேயே குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

இச்சம்பவத்தில் பொலிஸ் ஊழியரான திரு. க. இராஜதுரை என்பவரே கொல்லப்பட்டவராவார். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்தது. இப்பகுதியிலுள்ள

[4 ஆம் பக்கம் பார்க்க]

### மூதூர் இராணுவத்தினரால் ஆசிரியர் ஒருவர் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் மூதூர் ஜி.பி.எஸ் இராணுவத்தினர் ஒரு ஆசிரியரைக் கைதுசெய்து முகாம்கொண்டு சென்றுள்ளனர்.

[illegible] 10.30 மணியளவில் இவர் கைதுசெய்யப்பட்டார். மூதூர் 7 ஆம் வட்டாரம் சேனையூரைச்சேர்ந்த வடிவேல் தவராசலிங்கம் (வயது 24) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

## நேற்று தாக்குதல் இடை நிறுத்தம்: குண்டுவீச்சு தொடர்கிறது

நமது நிருபர்

வெற்றிலைக்கேணி கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து வெளியேறமுயன்ற இராணுவத்தினர் தமது முன்னேறும் முயற்சியை இடைநிறுத்தியுள்ளனர். நேற்று முன்தினம் கடற்படை விமானப்படை உதவியுடன் முன்னேறமுயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் படையினருக்கு ஏற்பட்ட பெரும் சேதத்தையடுத்து நிலைகுலைந்த இராணுவம் முன்னேறும் முயற்சியை இடைநிறுத்தியுள்ளது.


இதேவேளை புல்லாவெளி கட்டைக்காடு வெற்றிலைக்கேணி பகுதிகளில் நேற்று சிறிலங்கா விமான படைவிமானங்களின அகோரக்குண்டு வீச்சுத் தாக்குதல்களும் அகோர எறிகணைவீச்சும் இடம்பெற்றுள்ளன. இக்குண்டுவீச்சு தாக்குதலில் புல்லாவெளி தேவாலயம் தரைமட்டமாகியது. மண்டலாய்ப்பிள்ளையார் கோவில் சேதமடைந்தது.

நேற்று முன்தினம் வடியடி முகாம் புல்லாவெளிக் கோயிலடி கட்டைக்காடு முலைப் பக்கம் ஆகிய மும்முனைகளில் வெளியேற முயன்ற இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் இராணுவத்தினரின் முயற்சி [illegible] முறியடிக்கப்பட்டமை தெரிந்ததே.


பலமணிநேரம் இடம்பெற்ற இச்சண்டையின்போது பல இராணுவத்தினர் பலியாகியதுடன் பல கவசவாகனங்களும் தகர்க்கப்பட்டன.

இதேவேளை வெற்றிலைக் [illegible]லும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு புல்லாவெளி பகுதிகளை நோக்கி சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று இரண்டாவது நாளாக கடும் குண்டுவீச்சுத் தாக்[illegible]

## 3 வேங்கைகள் வீரச்சாவு



மேஜர் அழகன்



வீரவேங்கை சேரன்



கட்டைக்காட்டுப் பகுதியில் நேற்று இடம் பெற்ற எறிகணைத் தாக்குதலில் மூன்று வேங்கைகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த மேஜர் அழகன் (செல்வராசா இளங்கோ. கல்வயல் சாவகச்சேரி). வீரவேங்கை சேரன் (சிவஞானம் அன்ரனி சில் முனியான் கட்டைக்காடு, வீரவேங்கை சிற்றம்பலம் (சபேசன், புலேந்திரன் [illegible]

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் மூதூர் ஜி பி.எஸ் இராணுவத்தினர் ஒரு ஆசிரியரைக் கைதுசெய்து முகாம்கொண்டு சென்றுள்ளனர்.

கடந்தஞாயிறுகாலை 10.30 மணியளவில் இவர் கைதுசெய்யப்பட்டார். மூதூர் 7 ஆம் வட்டாரம் சேனையூரைச்சேர்ந்த வடிவேல் தவராசலிங்கம் (வயது 24) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

லடி கட்டைக்காடு முள்ளிப் பக்கம் ஆகிய மும்முனைகளில் வெளியேற முயன்ற இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் இராணுவத்தினரின் முயற்சி இச்சண்டையின்போது பல இராணுவத்தினர் பலியாகியதுடன் பல கவசவாகனங்களும் தகர்க்கப்பட்டன.

இதேவேளை வெற்றிலைக்கேணிப்பகுதியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பதினைந்து இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும், கூட்டுப்படைகளின் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஆனால் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்பு இதனி

டைக்காடு புலிகளின் நிலைகளை நோக்கி சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று இரண்டாவது நாளாக கடும் குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தியது.

சிறிலங்கா விமானப்படைத் (4ஆம் பக்கம் பார்க்க)

சீலன் (சிவராசா) . . . சேரன் (சிவஞானம் அன்ரனி செல் முள்ளியான் கட்டைக்காடு, வீரவேங்கை சிற்றம்பலம் (சபேசன், புனேந்திரன் அன்ரன் அஜநாஸ் நெடுந்தீவு) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



வீரவேங்கைசிற்றம்பலம்

## பல்கலை புதிய அனுமதிமுறை கண்டித்துமாபெரும் ஊர்வலம்

### பல்லாயிரக்கணக்கில மாணவர்திரண்டனர்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதியில் அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய திட்டத்தைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உட்பட பல்லாயிரக்கணக்கானோர் இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்

குடாநாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் இருந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் அஞ்சலிக்கு

ஈழநாதம் நிர்வாகப் பொறுப்பாளர் மேஜர் அழகனின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று பகல் 11.00 மணி முதல் ஈழநாதம் அலுவலகத்தில் வைக்கப்படும்

## கைப்பற்ற முடிந்தாலும் பாதுகாப்பது சந்தேகமே பி.பி. சி. கணிப்பு

(லண்டன்)

இராணுவம் தற்போது மேற்கொள்ளும் நடவடிக்கையில் தற்போதைய ஆயுத பலத்தின் மூலம் வெற்றியடையக் கூடும். ஆனாலும் அதை தொடர்ந்தும் அப் பகுதியை தக்க வைத்துக் கொள்ள முடியுமா என்பது சந்தேகமே என்று பி. பி. சி. கொழும்பு முகவரை மேற்கோள் காட்டி வெளியிட்ட விமர்சனக் குறிப்பில் தெரிவித்தது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது கடந்த ஆண்டிலும் இராணுவம் பெரும் எடுப்பிலான நடவடிக்கை மூலம் இந்தப் பகுதியை (4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை தோற்கடிக்கவேண்டும் அதன் பின்னரே அரசியல் தீர்வு

## அரசியல்-ராணுவ தலைமை முடிவு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முன்பாக புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்படவேண்டும் என சிறிலங்காவின் அரசியல் இராணுவ தலைமைபீடங்கள்படையினருக்கு அறிவுறுத்தியிருப்பதாக தெரியவருகிறது. திருப்திபடக்கூடிய வகையில் சில வெற்றிகளைப் படையினர் காட்ட வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்பட்டுள்ளதாகவும், அரசியல் தீர்வொன்றை இவ்வருட இறுதிக்குமுன் எட்டுவதற்காக இராணுவம் போரில் வெற்றியடைய வேண்டுமென அரசியல் தலைமைப் பீடம விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நம்பகமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான பெருமெடுப்பிலான இராணுவ நடவடிக்கையொன்றுக்கு அரசாங்கம் உத்தரவிட்டு இருப்பதாகவும தெரிவித்துள்ளது. ஞாயிறு நள்ளிரவுக்குப் பின்னர் மூபதது மணிநேரத்தினுள் இத்தாக்குதல் ஆரம்பமாகு (4 ஆம் பக்கம் பார்க்க)

## நிர்வாகப் பொறுப்பாளர் வீரச்சாவு அடைந்தார்

ஈழநாதம்நாளிதழின் நிர்வாகப்பொறுப்பாளராக கடந்தஇருஆண்டுகளாகச் செயற்பட்டுவந்த திரு. செல்வராசா இளங்கோ (அழகன்) நேற்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். என்பதனை ஆறாத்துயரத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்

அவர் ஈழநாதம் பெப்ரவரி 1990 இல் ஆரம்பித்தது முதல் பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும ஈழநாதம் நிறுவனத்தை திறம்பட வழிநடத்தி வந்தவராவார்.

ஈழநாதம் நிர்வாகப் பொறுப்பாளர்

# அழகனுக்கு

அஞ்சலிகள்...

## வரி விளம்பரம்

**டில்கா வாச் வேக்ஸ்**

பாவித்த நல்ல நிலையில் உள்ள கடிகாரங்கள் வாங்கப்படும் விற்கப்படும். பழுதடைந்த கடிகாரங்களும் உதிரிப்பாகங்களிற்காக வாங்கப்படும். சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்தி கொடுக்கப்படும். DILKA WATCH WORKS ,404/1 ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலைய முன் மேல் மாடி) யாழ்ப்பாணம் (2731)


**மண்ணெண்ணை விநியோகம்**

வேலணை ப. நோ. கூ. சங்கம் கடந்த ஒருவாரமாக யாழ்மாவட்ட பாவனையாளர் அனைவருக்கும் மண்ணெண்ணை பங்கீட்டு அடிப்படையில் வழங்கி வருகிறது. (1லீ. 24 ரூபா 50சதம்).

இது வேலணை ப. நோ. கூ. சங்க பாவனையாளரிற்கு மனோகரா தியேட்டரிற்கு அருகாமையிலுள்ள சங்கத்தின். இலை இல2லும் ஏனைய யாழ்மாவட்ட பாவனையாளரிற்கு மானிப்பாய் வீதி சோனாற் தோட்டத்தில் அமைந்துள்ள அவர்களது மக்கள் கடை மூலமும் வழங்கி வருகிறது.

அத்தோடு சன்லைற் சவர்க்காரம் ரூ 8.50 படியும் கிஸ் 9 ரூபா வீதமும் சகலருக்கும் வழங்கி வருகிறது தொடர்ந்தும் திங்கட்கிழமையில் இருந்து 1அட்டைக்கு 2லீற்றர் வீதம் விநியோகிக்கப்படும் என்றும் தாம் இதுவரையில் 8500 அட்டைகளுக்கு விநியோகித்துள்ளதாகவும் அதன் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (88)

## 2 - ம் ஆண்டு இதய அஞ்சலி



**வீரவேங்கை பேபி**
**(செல்லையா அகிலநாதன்)**


வீர ஜனனம் 19 - 11 - 1975 வீர மரணம் 30 - 06 - 1990

மண்ணினை மீட்டிடும் மறப்படைதனிலே
மனதோடிணைந்து போராடும் நாளில்
எண்ணிய தமிழீழம் இனிமையாய்க் காணுமுன்
எதிர்பாராவிபத்தினில் ஏகினாய் எமனிடம்
கண்ணிலும் மேலாய்க் கருதினோம் உன்னை
நீ உயிரிலும் மேலாக நேசித்தாய் மண்ணை
ஆண்டுகள் இரண்டிங்கே உருண்டோடினாலும்
அழியாது உன்நினைவு அவனியில் நிலைக்கும்

துயரால் ஏங்கும்
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி
உறவினர், நண்பர்கள்.

காங்கேசன்துறை. (2726)

## முதலாம் ஆண்டு நினைவு



**2ஆம் லெப். இருபா**
**(நீலப்பிள்ளை கதிர்காமநாதன்)**
(ஆனையிறவுத் தாக்குதலில் வீரச்சாவெய்தினார்)

தாயின் மடியில்: 29-03-1963 தாயக மண்ணில்: 11 07-1991

எரிகின்ற நெருப்பிலே காலை வைத்தாய்,
ஏழையின் நெஞ்சிலே பாலை வைத்தாய்,
எதிரியின் நெற்றியில் சூளை வைத்தாய்.
ஏங்கிய மக்களை வாழ வைத்தால்,
எதிரியை அகற்றிட நாளை வைத்தாய்,
எட்டப்பன் கூட்டத்தை மாழ வைத்தாய்.
தமிழர்கள் எங்களை ஆள வைத்தாய்,
தாயவள் தன்னை அழ வைத்தாய்!

நாவற்காடு, வரணி. அன்னை, சகோதரர்கள்.

## முதலாம் வருட ஞாபகார்த்தநாள்



**கப்டன் லீமா**
**(செல்வி இராசேந்திரம் கௌரி)**

தமிழீழ வளர்வுக்காய்: 16 - 09 1971 தமிழீழ மலர்வுக்காய்: 11 - 07 - 1991

திதி: 30 - 06 - 1992

ஆண்ட தமிழன் அடிமைநிலை தானுணர்ந்து
வேண்டுமொரு ஈழமென விரைந்து நின்ற கோதையவள்
வேண்டாமெனக்கு ஒரு மேற்படிப்பு எனக் கூறி
தாண்டினாள் தாய்தந்தை தானிட்ட கோடுதனை
பூண்ட தன் இலட்சியத்தை புனிதமாய் ஆக்களண்ணி
மாண்டாலும் தமிழீழ மண்ணுக்காய் எனக் கூறி
வேண்டினாள் தன் கரத்தில் வேகமுடன் துப்பாக்கி
பண்பாடு நிறைவுடனே பலகளங்கள் தானாம.
கண்டாளே ஆனையிறவு களமதனைக் காரிகையாள்
திண்டாடிக்கொண்டு அங்கே சிதறிநின்ற இராணுவத்தை;
மன்றாடி ஓடவைத்த மலர்ப்பாதம் நாம் பணிந்து
சென்றடி செல்வோமே செருக்களம் நாம் புகுந்து

இன்று 30 - 06 - 92 எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டுத்திதியில் கலந்துகொள்ளுமாறு நண்பர்கள், சகபோராளிகள், உறவினர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''கௌரி வீதி'' துன்னாலை வடக்கு, கரவெட்டி, இந்திரம்மன் கோவிலடி,

பிரிவின் துயராற்றா அப்பா, அம்மா, தங்கை, தம்பிமார், மாமா உற்றார், உறவினர்.

(2716)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் முத்தாக | | தாயக வித்தாக |
| --- | --- | --- |
| 05 |  | 11 |
| — | | — |
| 06 | | 07 |
| — | | — |
| 1971 | | 1991 |

11-07-1991இல் சிங்கள இனவாத அரசபடைகளுடனான ஆனையிறவு சமரில் வீரச்சாவெய்திய

**லெப், மைக்கல் (ஆ. விநாயகமூர்த்தி)**
(முன்னாள் உடுப்பிட்டி பிரதேசப் பொறுப்பாளர்)

சிரார்த்த திதி: ஆனி அமாவாசை 30-06-92
(செவ்வாய்க்கிழமை)

மாண்டதோ ராண்டு மாவீரனாகி இன்னொரு
ஆண்டொன்று பூக்குதடா ஆருயிரே ஈண்டிங்கு
உம் நினைவு கூருகிறோசம் உத்தமனே உயிர்உள்ளவரை
எம்முளத்தில் நீயிருப்பாய் நன்கு.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


சரஸ்வதி வித்தியாலய வீதி, நெல்லியடி, கரவெட்டி.
(2718)

பெற்றோர், சகோதரன், சகோதரி, மாமா, மாமி, மற்றும் உறவினர்

## மானம் மிகு புலி வீரர் - ஆவி தானம் எனத் தந்தார் களத்திடை







## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## நினைவு கூருகின்றோம்...

1992-06-30



வீரவேங்கை
இளங்கதிர் சூரியகுமார்
[சின்னராசா பத்மநாதன், ஐயங்கேணி, மட்டக்களப்பு]



வீரவேங்கை
வெற்றி
[கனகலிங்கம் அருள்நேசன் - மாசார், பளை]



லெப். கலைஞன் நசீர்
செல்வநாயகம் ரஞ்சன்
புதுக்கொலனி, மாவடிவேம்பு, வந்தாறுமூலை, மட்டக்களப்பு]

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கைகள்



2-ம் லெப். எல்லாளன்
அன்சார் ஜேசுதாசன்
கனிஸ்டன் - உரும்பராய் தெற்கு, உரும்பராய்]



லெப். வீரமணி தீபன்ராஜ்
குணரத்தினம
சிறிரஞ்சன்-மட்டுவில்வடக்கு, மட்டுவில்]



வீரவேங்கை
கபில்
[பாலசிங்கம் முரளிதரன் - டச்சு றோட், அளவெட்டி வடக்கு, அளவெட்டி]



வீரவேங்கை
வீரமணி
[கணேசபிள்ளை சந்திரசேகரம் சண்ணஇபுரம், திருக்கோணமலை]



கப்டன் எல்லாளன்
ஒட்டேசா
பொன்னுச்சாமி
கிரிதரன் - அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை]

நெல்லியடி, கரவெட்டி. சகோதரன், சகோதரி,
(2718) மாமா, மாமி, மற்றும் உறவினர்

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் அமுதினி**
(சிவமதி சிவசுப்பிரமணியம்)
(முன்னாள் தென்மராட்சி, மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்)

தாயின் மடியில்: 26-05-1968
ஆனையிறவுச் சமரில்: 11-07-1991
திதி: 30-06 1992

மானம் இழந்து தலைசாய்ந்து
மாற்றார்க் கடிமைத் தொழில் செய்து
கூனல் விழுந்த தமிழ் வாழ்வின்
கொடுமை தீர்க்கப் புறப்பட்டேன்.

தமிழீழத்தை மீட்டெடுக்கும் போரில் ஆகுதியாகிய போராளிகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது அஞ்சலிகள்.

''ஞானகிரி''
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். —குடும்பத்தினர்

(4622)

# நினைவு கூருகின்றோம் . . .
## 1992-06-30

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் இக்கத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கிரேச்சப்பல்** [பரஞ்சோதி நச்சினார்க்கினியர் - 'இனியவனகம்', வதிரி, கரவெட்டி.]

1990 ஆம் ஆண்டு மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

**நிசாம்** [பழனி மகேந்திரன் [சிறி] - கணேசபுரம், பரப்புக்கடந்தான், மன்னார்]

காங்கேசன்துறையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த -

**சொக்கிளேற் பேபி** [செல்லையா அகிலநாதன் - மாங்கொல்லை, காங்கேசன்துறை]

அம்பாறை வீரமுனைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் மூடிமீ வைத்துப் படுகொலை செய்யப்பட்ட 84 தமிழ் இளைஞர்கள்,

மட்டக்களப்பு உன்னிச்சைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட புதுநகரைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

கிளிநொச்சியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலை / மூதூர், சட்டைபறிச்சான் பகுதியில் எமது முகாம் ஒன்றைச் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைக்க முயன்ற போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். நிமால்** (பொன்னையா புலேந்திரன் - திருக்கோணமலை.)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொலலப்பட்ட வேப்பவெட்டுவானைச் சேர்ந்த விவசாயியான தமிழ் இளைஞன் ஐயங்கேணியைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான தமிழ்ப் பொதுமகன், பெரியபோரதீவுப் பகுதியில் கப்பம் கொடுக்க மறுத்தமையினால் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் சுடடுக் கொல்லபபடட தமிழ் வர்த்தகர்

திருக்கோணமலை தோப்பூர்ப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் சூடைக்குடா, கூனித்தீவுப் பகுதிகளைச் சுற்றிவளைத்தபோது சூடைக்குடாவில் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ/4626)

நல்லூர் பிரதேச ... மாநகரசபை ... யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

கடமையைச் சரிவர ஆற்றும் போது, அதில், அச்சத்திற்கு இடம் இல்லை.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 30-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 35


## வரலாற்றுக் கடமை

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டு இராணுவ முகாம்களில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். இத்தாக்குதலில் கடற்படை, விமானப்படை என்பனவற்றின் முழு ஒத்துழைப்புடன் நான்கு படையணிகள் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளன இப்பாரிய இராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கம் வெற்றிலைக்கேணிக்கும் ஆனையிறவு இராணுவ முகாமிற்கும் இடையில் உள்ள சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தை இணைப்பதாகும்.

இந்த இணைப்பின் மூலம், யாழ். குடாநாட்டை பிரதான நிலப்பரப்பில் இருந்து துண்டாடி தனிமைப்படுத்துவதே சிறிலங்கா இராணுவத்தின் நோக்கமாகும். ''விடுதலைப்புலிகள் பிரதான நிலப்பகுதியில் இருந்து யாழ். குடாநாட்டிற்குள் ஊடுருவாமலும், அங்கிருந்து வெளியேறாமலும் தடுப்பதே இராணுவத்தின் நோக்கம்'' என இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். அதாவது யாழ். குடாநாட்டுடன் தற்பொழுது போக்குவரத்து மேற்கொள்ளப்படும் பாதையை மூடி ஒரு இராணுவ வேலி அமைப்பதன் மூலம் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தப் போவதாக இராணுவத்தரப்பு எண்ணுகின்றது.

இதில் பல கேள்விகள் உள்ளன. இத்திட்டம் எந்தளவிற்குச் சாத்தியப்படும்? இதில் இராணுவத்தால் வெற்றிபெற முடியுமா? இந்த வழியை அடைத்துவிட்டால் புலிகளின் போக்குவரத்தும், தொடர்பும் கட்டுப்படுத்தப்படுமா? இதில் இவை சில கேள்விகளாகும். இக்கேள்விக்கு ஏற்றாற்போல், ஆனையிறவு-வெற்றிலைக்கேணி ஆகிய இரண்டு இராணுவ முகாம்களையும் இணைப்பதற்கு இராணுவத்திற்கு 24 மணி நேரம் போதும் என ஒரு இராணுவ உயர் அதிகாரி தெரிவித்துள்ள வேளையில், தாக்குதல் ஆரம்பமாகி 24 மணி நேரமாகியும் இராணுவம், தமது எல்லையைத்தாண்டி சிறிது தூரமேனும் முன்னேற முடியவில்லை. முன்னேற முயன்ற இராணுவம் பெரும் உயிர், தளபாட இழப்புக்களுடன் திரும்ப வேண்டி வந்தது.

# இந்தியத் தூதுவருக்கு 'தலை' இருக்கிறதா?

## சிறிலங்கா ராஜதந்திரி கேள்வி

சிறிலங்காவின் இந்தியாவிற்கான தூதுவர் என் என். ஜா அண்மையில் றோட்டறிக்கழக மாநாடொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்த சில கருத்துக்கள் முற்றிலும் இந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்கள் என்பதுடன் அவருக்கு தேவையற்றதும் பொருத்தமற்றதுமான சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கப்பட்டவையென்பதுவே எனது கருத்தாகும்.

இதற்கான விளைவை அவர் எதிர்பார்த்திருக்கக்கூடும். மிகவும் உணர்ச்சிவயப்படக்கூடியதும் மிகவும் சர்ச்சைக்குரியதுமான உள்நாட்டு விவகாரம் ஒன்றில் தூதுவர் ஜா தனது கருத்துக்களை தெரிவிக்க சந்தர்ப்பம் மிகவும் கவனத்திற்கு உரியதாகும்.

இராஜதந்திரக் கலையின் ஆசான் எனக் கூறப்படும் 'ரெலிரான்ட்' ஒரு சமயம் இந்நிலை இராஜதந்திரி ஒருவருக்கு ஆலோசனை வழங்குகையில் ''உனது தலையை அனைத்தும் மேலாக வைத்துக்கொள்'' எனக் குறிப்பிட்டார்.

தூதுவர் ஜாவின் பேச்சுக் குறித்து உள்ளூர் தினசரிகளில் படிக்க நேர்ந்தபோது அனைத்தையும் விட ''அவருக்கு தலை இருக்கிறதா பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு'' என நினைத்து நான் அதிசயப்பட்டேன். அப்படி ஒன்று அவருக்கு இருக்குமானால் அது சதிய யோசனை மற்றும் பேதங்களை வளர்க்கும் பிராமணத்துவ ரீதியான சிந்தனையில் வளர்க்கப்பட்டிருக்கிறது என்றே கருத வேண்டியிருக்கும்.

ஜனாதிபதி தமது வெளிநாட்டமைச்சருக்கு ஊடாக இந்தியத்தூதுவருக்கு தமது சொந்த அலுவல்களை மட்டும் கவனிக்கும்படியும் உள்நாட்டு விவகாரங்களில் அவர் வாயைத்திறக்கவேண்டாம் என்பதையும் அப்படிச்செய்ய தவறும் பட்சத்தில் அடுத்த விமானத்தில் தமது சொந்த நாட்டிற்குச் சென்றுவிட நேரும் என்பதையும் அறிவுறுத்தியிருப்பார். என்றே நம்புகிறேன்

முன்னைய பிரிட்டன் உயர்ஸ்தானிகர் கிளாட்ஸ்ரோனை இதனோடு ஒப்பிடுகையில் மிகச் சிறிய விடயமொன்றிற்காக நாடை விட்டு வெளியேற்றிய பிறகு இந்த நாட்டின் முக்கியமான இரு இனங்களுக்குமிடையே பதற்றத்தை ஏற்படுத்தக் கூடிய முறையில் பகிரங்கமாக பேசிய தூதுவர் ஜாவை ஏன் இன்னும் தொடர்ந்து அனுமதிக்க வேண்டும் என் தூதுக் என்னால் எந்தக் காரணத்தையும் காண முடியவில்லை

வடக்கு கிழக்கு பிரச்சினை பற்றியும், இணைப்பு விவகாரம் குறித்தும் அவர் பேசியமைக்கு அப்படிச் செய்வது தான் சரியானது ஜா மறுமொழி டாக்டர் மாறிவருகிறார் இருவருக்கும் இடையிலான வேறுபாடு மிக மெல்லியதாயினும் இருவரது நோக்குகளும் ஒன்றே தான். எனவேதான் ரசும், தேசப்பற்று மிக்க மக்களும் கையை விட்டு நழுவுவதற்கு முன்பாக அரதுப்பாக்குகளுக்குத் தடை விதிக்க வேண்டும்.

### பொருத்தமான தருணம

''பொருத்தமான தருணத்தில் பொருத்தமான விடயத்தைப் பேசுவது வெற்றிகரமான ராஜதந்திரிக்கு அவசியம் தேவைப்படுவது'' என்று இந்தியாவில் மிகுந்த முக்கியத்துவம் பெற்ற சிரேஷ்ட ராஜதந்திரியான கே. எம். பணிக்கர் ஒருதடவை குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஜாவிற்குப் பொருத்தமான தருணம் பற்றி எதுவுமே தெரியவில்லைப் போலும் இலங்கையின் வரலாற்றில் உணர்ச்சிகரமான பிரச்சினையாக இருக்கு சிங்கள - தமிழர் உறவு பற்ற அதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒரு தீர்வுத் திட்டத்தை முன் வைத்து நீண்ட காலமாக இருந்துவரும் பிணக்கைத் தீர்க்க முயற்சி எடுத்துவரும் தருணத்தில் அவர் தனது வாயைத் திறந்துள்ளார் இது முழுக்க முழுக்க ஒரு உள்நாட்டு விடயமாகும்.

வடக்கு கிழக்கு இணைப்பிற்கு குறைந்ததான எந்தத் தீர்வையும் மிதவாத தமிழ்க் குழுக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டாது என்று இந்தியத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். இவர் யார் இதைப் பற்றிப் பேச? இவருக்கு எப்படித் தெரியும்? எப்பொழுது முதல் மிதவாதத் தமிழ்க் குழுக்கள் இவரைத் தமது பேச்சாளராக நியமித்துக் கொண்டுள்ளன? எப்பொழுதும் செய்வதைப் போல அவர்களால் தமது தேவைகள் குறித்துப் பேச முடியும். ராஜதந்திரப் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றின் முன்பாக விவாதிக்கப்படும் ஒரு விடயத்தில் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் பேசுவதற்கு எப்படி அனுமதிக்கப்படக் கூடும்? இது இராஜதந்திரச் சிறப்புரிமைகளை மீறுவதாக அமையாதா? ஜாவின் நடத்தை பற்றி எமது அரசாங்கம் மிகவும் தீவிரமான பரிசீலனைக்கும் கவனத்திற்கும் எடுக்க வேண்டும் இந்தியாவிலிருக்கும் காஷ்மீரியர்கள் பாகிஸ்தானுடன் இணைந்து கொள்வதற்கு விருப்பம் கொண்டுள்ளனர் என்று பிரசாரம் மேற்கொள்வதில் இந்தியாவிலுள்ள எமது தூதுவர் ஈடுபட்டால் அது பற்றி இந்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்? இப்படிபொரு சம்பவம் நடந்தால் எப்படியிருக்கும் என்பது பற்றி அறிய உண்மையாகவே எனக்கு மிகுந்த ஆவலுள்ளது.

> சிறிலங்காவின் ஓய்வு பெற்ற ராஜதந்திரிகளில ஒருவரான ஸ்டான்லி ஜயவீர சண்டே ஒப்சேவர் இதழில் எழுதிய கட்டுரை ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட பகுதியின் மொழியாக்கம் இது. இக்கட்டுரையாளரான ஸ்டான்லி ஜயவீர ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் சிறிலங்காவிற்கான தூதுவராக இருந்ததுடன் கொழும்பிலுள்ள வெளி விவகார அமைச்சின் இந்திய விவகாரங்களுக்கான பிரிவின் ஆலோசகராகவும் பணியாற்றியவர் ஆவார்.

### இயல்பான ஆர்வம்

இதன் மூலம் ஒற்றுமை ஏற்படுவதைத் தடுக்கவும், இந்தப் பிளவை பயன்படுத்தி தனது இஷ்டத்திற்கு இடங்கொடுக்காத அரசுகளுக்கு தலையிடி கொடுக்கவும் தான் இந்தியா விரும்புகின்றது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசுக்கு எதிராக பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் இந்தியா எப்படிப் பயன்படுத்தியது என்பதைப் புரிந்து கொண்டால் இதற்கு மேலதிக ஆதாரம் எதுவும் தேவைப்படாது.

பங்களாதேசிகள், நேபாளிகள், பாகிஸ்தானியர்கள் ஆகியோரைக் கேட்டால் அவர்கள் தொடர்பாக இந்தியா கடைப்பிடித்த கொள்கைக்கும் இதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்பதைக் கண்டு கொள்ளலாம்.

1987 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை பாதுகாப்பு படைகள் கைப்பற்ற இருந்த சமயத்தில் அப்போதைய இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்சிட் கொண்டிருந்த மனோ நிலைக்கும், ஜாவின் தற்போதைய நடத்தைக்கும் உள்ள தொடர்புபற்றி ஜனாதிபதி கவனத்தில் எடுத்திருப்பார் என்றே நம்புகின்றேன். சிறிலங்கா பாதுகாப்பு படைகளிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடைவதற்கு இந்தியா அனுமதிக்காது என்று அவர் அப்போது எச்சரித்திருந்தார். வட கொழும்பு றோட்டறிக் கழக மாநாட்டில் ஜாவின் பேச்சும் வடக்கு கிழக்கு இணைக்கப் படாத இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் இந்தியாவிற்கு ஏற்புடையதல்ல என்பதைக் கோடி காட்டும் ஒன்றாக இருக்கலாம். இது அவர்களுக்குசம்பந்தமில்லாத ஒரு விடயம் என்பதுவே உண்மையாகும்.

இந்தியாவின் பிரபலமான பத்திரிகையாளரும், வி.பி. சிங் பதவிக்காலத்தின் போது இங்கிலாந்திற்கான இந்தியத் தூதுவராக இருந்தவருமான குல்திப் நய்யார் கடந்த வாரம் ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய குறிப்பு ஒன்றில் ''ஒரு காலத்தில் இந்தக் கதைகளின் உண்மை எல்லாம் அம்பலமாகும் அப்போது இந்தியர்கள் வெட்கத்தால் தலை குனிய நேரிடும்.'' என்று குறிப்பிட்டு இருந்தார். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இதன் முதற்பகுதி உண்மையே ஆனாலும் எனது அறிவுக்கு எட்டியவரையில் இந்தியர்களில் பலருக்கு வெட்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

# பேச்சுக்களில் பங்குபற்ற 14 அம்ச கோரிக்கை

தென்னாபிரிக்காவில் பல இனத்தவர்கள் பங்கு கொள்ளும் பேச்சுக்களை மீண்டும் தொடர்ந்து நடாத்தச் செய்வதற்காக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தனதுபதின்னான்கு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை தென்னாபிரிக்க அரசிடம் கையளித்துள்ளது.

இந்த கோரிக்கைகளின் விபரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கும் டி. கிளார்க் அரசுக்கும் இடையே யான பேச்சுக்கள் இன்று செவ்வாய்மீண்டு தொடர்ந்து நடைபெற இருந்த போதும் ''போய்பதாங்'' படுகொலைகளை அடுத்து இப்பேச்சுக்களில் பங்கு கொள்வதற்கு ஏ. என். சி. மறுத்துவிட்டது.

இன்று செனீகல் தலைநகரியாகவில் ஐ நா. தலைமைச் செயலர் டாக்டர் பூட்டரஸ் காலியுடன் (ஏ. என். சி) ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும் தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர் திரு பிக் போத்தாவும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மேற்கு வங்காளத்தில்

# சங்கர் ராஜி என்ன ...

உயிர், தளபாட இழப்புக்களுடன் திரும்ப வேண்டி வந்தது.

ஆனால், பிரச்சினையின் முக்கியமான பகுதியும், இராணுவத்தினதும் அரசாங்கத்தினதும் நோக்கமும் இதுவல்ல. கடந்த இரண்டு வருடங்களாக தமிழர் பிரதேசங்களின் மீது தீவிர பொருளாதாரத் தடையை அமுல்படுத்தி வரும் சிறிலங்கா அரசாங்கம், கடந்த வருடத்தில், ஒப்பரேசன் வலம்புரி மூலம்யாழ். குடா நாட்டுடன் இணைக்கப்பட்டிருந்த ஒரே ஒரு பாதையான பூநகரிப் பாதையையும் தடை செய்தது. இதன் மூலம், யாழ்ப்பாணக்குடா நாட்டின் மீது முற்றுகையைத் தீவிரமாக்கியது. ஆனால், ஆழம் குறைந்ததும் சகதியானதுமான பல இன்னல் நிறைந்த கொம்படிப் பாதை மக்களின் போக்குவரத்து பாதையாகியது. மக்கள் பெரும் நெருக்கடியின் மத்தியில் அரசாங்கத்தின் முற்றுகையை உடைத்தெறிந்தார்கள்.

இன்று இப்பாதையையும் சிறிலங்கா அரசாங்கம் மூடிவிட எத்தனிக்கின்றது சுமார் 10 லட்சம் தமிழ் மக்களை முற்றுகைக்கு உள்ளாக்கி பட்டினியின் விளிம்புக்குக் கொண்டு சென்று பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்திச் சாகடிக்கவிரும்புகின்றது இதன்மூலம் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் நசுக்கி விடலாம் எனவும் அதாவது ஒரே நேரத்தில் இராணுவ நடவடிக்கை மூலமும் இறுக்கமான முற்றுகை மூலமும் தமிழரை அடக்கி ஒடுக்கி விட முயற்சிக்கிறது

அதாவது சிங்களப் பேரினவாதம் தனது கோரமான பற்களை தமிழ் மக்கள் மீது பாய்ச்ச முற்பட்டுள்ளது. இது புலிகளைத் தோற்கடித்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான யுத்தமல்ல, தமிழரை அழித்து தமிழர் தேசிய இனப்போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கான யுத்தமாகும். இதனை இன்று சிறிலங்கா அரசாங்கத்தின் கால்களில் மண்டியிட்டு அரசியற் பிச்சை கோரி நிற்கும் தமிழ்க்குழுக்களே ஏற்றுக் கொள்கின்றன.''அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை நாடிநிற்கிறது. அரசியற் தீர்வில் அக்கறை காட்டுவதாக இல்லை.'' இது அவர்களின் கூற்றாகும்.

இந்நிலையில், தமிழ் மக்கள் சிறிலங்கா பேரினவாத அரசிற்கெதிராகக் கிளர்ந்தெழுந்து போராடுவதைத் தவிர வழியில்லை. பட்டினிகிடந்து அழிவதை விட எதிர்காலச் சந்ததிக்காகவேனும் தமிழ்மக்கள் போராடியே தீரவேண்டும். அவ்வாறு இன்று போராடாது விடுபவர்கள் தமது வரலாற்றுக் கடமையை மறந்தவர்கள் ஆவார்கள்.

## மேற்கு வங்காளத்தில் மூவர் உயிரிழப்பு

(டில்லி)

மேற்கு வங்காள மாநிலத்தின் கூச்பீகார் மாவட்டத்தில் மார்க்கிஸ கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்வார்ட் பிளாக் கட்சித்தொண்டர்களுக்கு இடையே நடைபெற்ற மோதலில் மூவர் உயிரிழந்தனர் இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமையன்று இடம் பெற்றது

தீன்பிகா பகுதி பங்களாதேசின் போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டதை கண்டித்து நடைபெற்ற பந்த் ஒன்றின் போது இம்மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

## ஆசியாவிலும் பிராந்தியகூட்டு

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பிராந்திய நாடுகள் கூட்டுச்சேர்வதைப்போல ஆசியாவிலும் நாடுகளுக்கிடையே இணைப்புகள் ஏற்படவேண்டுமென மலேசியாவின் வெளிநாட்டு விவகார அமைச்சர் அப்துல்லா அகமட் பதாவிகூறியுள்ளார்.

## போதைவஸ்து கடத்தல் 8 பேர் கைது

(ரோம்)

மூன்று தமிழிளைஞர்கள், நான்கு சிங்களப்பெண்கள், ஒரு லிபியர் ஆகியோரைக் கொண்டு கடந்த ஆறு ஆண்டுகளாக இயங்கிவந்த போதைப் பொருள்கள் கடத்தும் கோஷ்டியொன்று ரோமாபுரியில் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாக தெரிய வருகின்றது.

இக் கோஷ்டியினரைக்கைது செய்வதில் நான்கு நாடுகள் கூட்டாகச் செயற்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

# சங்கர் ராஜி என்ன கூறுகிறார்

கொழும்பில் தங்கியிருந்து தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் முன்னாள் ஈரோஸ் பிரமுகர் சங்கர் ராஜி கொழும்பிலுள்ள பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் சில பகுதிகள்.

கேள்வி: இலங்கை - இந்திய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு ஆயுத போராட்டத்தை கைவிட்டு ஜனநாயக வழிக்கு திரும்பிய உங்களிடம் வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை என பெரும்பான்மை கட்சிகள் கூறுவது ஏமாற்றத்தை கொடுத்துள்ளதா?

பதில்:- பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக வழிக்கு திரும்பிய எமக்கு அதற்கான ஊக்குவிப்பு கிடைக்கவில்லை. இதனால் நாம் ஆயுதங்களை கைவிட எடுத்த தீர்மானம் சரியானது தானா என்றுகூட எண்ணத்தோன்றுகிறது.

இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய எமது மூத்த தலைவர்கள் கூட தமது முயற்சியில் வெற்றி பெறவில்லை.

பெரும்பான்மை தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை தெரிவுக்குழு முன் வைக்கும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் நிறைந்து காணப்பட்டது அந்த மாற்று தீர்வு ஏற்படும் பட்சத்தில் புலிகள் இயக்கமும் அதனை ஏற்றுக் கொள்ளலாம் என்ற கூடுதலான அபிப்பிராய நிலைப்பாடு மேலோங்கி நின்றது.

இந்த அரசாங்கத்துடன் நியாயமான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியாது. பெரும்பான்மை இன கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணமுடியாதென்ற கருத்து தற்போது பொதுமக்கள் மத்தியில் கூடிக்கொண்டே வருகிறது.

கேள்வி:- வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை, ஜனநாயக வழிக்கு திரும்பிய தமிழ் அரசியல் கட்சிகளுக்கு போதிய ஊக்குவிப்பு இல்லை என்ற நிலைப்பாடு புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்தை அங்கீகரிக்க வைக்குமா?

பதில்:- ஆயுதப்போராட்டத்தைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லை என்ற நிலைக்கு தள்ளப்படும் போது ஆயுதப் போராட்டம்தான் என்ற முடிவுக்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

கேள்வி:- அப்படியான ஒரு சூழ்நிலையில் வடக்கிற்கு சென்று செயல்பட முடியாத உங்களின் எதிர்காலம் என்ன?

பதில்:- இராணுவத் தீர்வு மூலம் இதற்கொரு தீர்க்கமான முடிவு இல்லை என்பதைக் கொண்டுதான் எமது அரசியல் எதிர்காலத்தை சிந்திக்க முடியும். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கிடையாது என எனக்கு திடமான நம்பிக்கை உண்டு.

கேள்வி:- அதாவது இனப்பிரச்சினை கு இராணுவத் தீர்வு இல்லை...?

பதில்:- நிச்சயமாக. ஆகையினால் இந்த பேச்சுவார்த்தை இன்று இல்லாவிட்டாலும் இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குப் பின்பாவது நிச்சயமாக நடைபெறத்தான் போகிறது குறைந்தபட்ச தீர்வு ஏற்படும் வரை மற்ற அரசியல் கட்சிகள் மக்களின் அரசியல் தொடர்பு புனர்வாழ்வில் ஈடுபடுவதையும் பாதுகாப்புப் படையினருடன் ஒத்துழைக்கும் தமிழ் இயக்கங்கள் அந்த ஒத்துழைப்பை கூடுதலாக செய்வதற்குரிய சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

கேள்வி:- இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண பாராளுமன்ற தெரிவுக்குழுதான் கடைசி சந்தர்ப்பம் என்று கூறப்படுகிறதே குறைந்தபட்ச தீர்வு ஏற்படும் வரை சமரச பேச்சுவார்த்தை நடைபெறுமா?

பதில்:- இல்லை .. இல்லை இதுபோன்ற இன்னுமொரு சந்தர்ப்பம் இரண்டு வருடமோ அல்லது மூன்று வருடங்களுக்குப் பின்போ ஏற்படலாம். அரசாங்கத்தை சமரச பேச்சுவார்த்தை மேசைக்கு தள்ளக்கூடிய இராணுவ பலம் புலிகள் இடத்திலுமுண்டு. தொடர்ந்து போராடக் கூடிய படைப்பலம், ஆயுதபலம் இவை இரண்டும் புலிகளிடம் உண்டு.

கேள்வி:- புலிகள் இயக்கத்தினால் மட்டும் தனித்து தன்னிச்சையாக இந்த ஆயுதப்போராட்டத்தை நடத்த முடியுமா?

பதில்:- ஆம். நிச்சயமாக. இது தொடர்ந்து நடந்துவரும் போராட்டம் சூழ்நிலையைக் கொண்டு என்ன முடிவை அவர்கள் எடுப்பார்கள் என்று என்னால் கூற முடியாது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அவர்களிடம் உள்ள ஆயுத பலத்தை கணிக்கும் போது அவர்கள் நிச்சயமாக தனித்து நின்று போராட முடியும்.

கேள்வி:- புலிகள் இயக்கத்தினர் தொடர்ந்தும் ஆயுதப் போராட்டத்தை நடத்தக் கூடிய சக்தியை கொண்டிருப்பதால் எதிரணியை சமரசப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்கக் கூடிய சக்தி உண்டா?

பதில்:- நிச்சயமாக. இவர் என்ன கூறுகின்றார்? ஆயுதங்கள் ஒப்படைப்பது பிழை? ஆயுதப் போராட்டத்தை தொடர்வதும் சரியல்ல ஆனால், ஜனநாயக வழியில் திரும்பியோருக்கு சிறிலங்கா அரசாங்கம் ஊக்கம் அளிக்கவில்லை. இதேவேளை, பேச்சுவார்த்தைக்கு இறுதிச் சந்தர்ப்பம் இதுவல்ல, இன்னும் இரண்டுமூன்று வருடங்களுக்கு பின்பும் பேச்சுவார்த்தை இடம் பெறலாம்.

சிறிலங்கா அரசின் நடத்தைகள் ஆயுதப் போராட்டத்திற்கு மக்களைத் தள்ளுகிறது. புலிகளின் நிலைப்பாடும் சரியானது. புலிகளை வெல்லவும் முடியாது எனினும் நாங்கள் இராணுவத்திற்கு ஒத்துழைப்போம் இவர் கூறுவது எங்களுக்கு புரியவில்லை உங்களுக்குப் புரிகிறதா? இன்றைய தமிழ் குழுக்களின் பரிதாப நிலை இது.

ஈழநாதம்

## அலங்கார உற்சவம்

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 2.7.92 அன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

ஞாயிறன்று 12.7.92 அன்று மகேஸ்வர பூசையை அடுத்து அன்னதான நிகழ்ச்சியும் இடம்பெறும்.

## திருமலை தளத்தில் றோகண குடும்பத்தினர்

(கொழும்பு)

ஜே.வி.பி அமைப்பின் தலைவராக இருந்து கொல்லப்பட்டவரான றோகண விஜேவீரவின் மனைவியும், குழந்தைகளும் திருக்கோணமலை கடற்படைத் தளத்திற்கு மாற்றப்பட்டு உள்ளனர். ஜனாதிபதி பிரேமதாசாவின் நேரடி உத்தரவின் பிரகாரமே இந்த இடமாற்றம் செய்யப்பட்டதாக சிரேஷ்ட கடற்படைத்தளபதி ஒருவர் கூறியுள்ளார்.

திருமதி விஜேவீர முன்னர் கணேமுல்லையிலுள்ள இராணுவ அதிரடிப்படைத்தளத்தில் வைக்கப்பட்டிருந்ததும், விமானப்படைத்தளத்திலுள்ள திஸ்ஸ வித்தியாலயவில் படிக்க வசதிசெய்யப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

## பல்கலை

திரண்டுவந்த மாணவர்கள் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் கூடினர் காலை 10.45 மணியளவில் அங்கிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது

ஊர்வலத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் அரசுக்கெதிரான சுலோகங்கள் அடங்கிய பதாகைகளையும் சுலோக அட்டைகளையும் தாங்கியவண்ணமும் உரத்த குரலில் கோஷங்களையும் எழுப்பியவண்ணமும் சென்றனர் அரசு அமுல்படுத்தியிருந்த ஊரடங்கு வேளையிலும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

இவ் ஊர்வலம் குறிப்பிட்ட ஒரு புள்ளியைக் கடந்து செல்ல சுமார் ஒரு மணி நேரம் எடுத்தது பலாலி வீதி. ஆஸ்பத்திரி வீதி ஆகியவற்றின் ஊடாக ஊர்வலம் யாழ். செயலகத்தை அடைந்தது அங்கு யாழ். அரசாங்க அதிபரிடம் சிறிலங்கா ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. மகஜரைப் பெற்றுக்கொண்ட யாழ்.அரசாங்க அதிபர் இம்

## கொக்கட்டிச்சோலை படுகொலை

## இராணுவ நீதி மன்றத்தில் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவம் தொடர்பாக இராணுவ நீதிமன்றமொன்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இந் நீதிமன்றத்தின் முன் தோன்றி பத்துப் பொதுமக்கள் சாட்சியமளித்தனர். கடந்த வியாழனும், வெள்ளியும் மட்டக்களப்பு இராணுவத் தளத்தில் இந்த விசேட இராணுவ நீதிமன்றம் கூடியது. இந் நீதி மன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்ட பத்தொன்பது இராணுவத்தினரும் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

## சொற்பொழிவு

வண்ணார்பண்ணை காட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வர பிள்ளையார் ஆலயத்தில் இன்று நடைபெறும் (30-6-92) சண்டேஸ்வர உற்சவ விழாவையொட்டி அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு இ ஜெயராஜ் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

## பணம் பறிப்போர் பற்றி விசாரணை நடத்தப்படும்

### -சிறில் ரணதுங்கா

(கொழும்பு)

கொழும்பில் வர்த்தகர்களிடம் பணம் பறிக்கும் கோஷ்டி குறித்து விரைவில் விசாரணை நடத்தப்படும் என்று தெரியவருகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போதுள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி

கொழும்பிலுள்ள வர்த்தகர்களிடம் பணம் பறிக்கும் கோஷ்டிகள் பற்றி விசாரணை நடத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க கூறியுள்ளார்.

## சாவகச்சேரிப்

திரு. சுப்பிரமணியம் திரு. வன்னியசிங்கம், திரு. சிவஞானம், திரு சின்னத்தம்பி திரு. சிவசம்பு, திரு. கார்த்திகேசு ஆகியோரது வீடுகள் பலத்த சேதமடைந்தன.

சங்கத்தானை கந்தசுவாமி கோயில் வீதியிலும் இரண்டு குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இதில் சேதமெதுவும் ஏற்படவில்லை. பதுங்கு குழிகளில் மக்கள் பதுங்கியதால் பெரும் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. (35)

## ஜனாதிபதி சுட்டுக் கொலை

(அல்ஜீரியஸ்)

அல்ஜீரியாவின் அரசுத்தலைவர் முகமெட் மூடியான் அவர்கள் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள நகரொன்றிற்கு விஜயம மேற்கொண்ட அவர் துப்பாக்கியால் சுடப்பட்டு ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இவர் பதவிக்கு வந்து ஆறு மாதங்கள் கூட ஆகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளை

வாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் விமானத் தாக்குதல்கள், கடற்படையினரின் தாக்குதல்கள் என்பனவும் அடங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## புலிகளின்

குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், அவ்ரோ விமானம், உலங்கு

## 'கின்னஸ்'இல் ஏயர் இந்தியா

[டில்லி]

வளைகுடாப்போரின் போது பாதிக்கப்பட்டு அம்மான் நகரத்தில் சிக்கிய ஒரு லட்சத்திக்கும் அதிகமாக இந்தியர்களை பாதுகாப்பாக விமானங்களில் அழைத்து வந்தமைக்காக ஏயார் இந்திய நிறுவனம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. உலக சாதனைகளைப் பதிவு செய்யும் கின்னஸ் புத்தகம், நானூற்று எண்பத்து எட்டு தடவை அம்மானுக்கு விமான சேவை நடத்திய ஏயார் இந்தியாவின் சேவையைப் பதிவு செய்துள்ளது.

## இந்திய சட்டவல்லுனர் குழு இலங்கைவர அனுமதி மறுப்பு

(டில்லி)

கொழும்புக்கு சென்று விசாரணை நடத்த இருந்த மகதிய புனாய்வு சட்ட வல்லுனர் குழுவிற்கு சிறிலங்கா அரசு அனுமதி அளிக்காதது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து நேற்றுக்காலை புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய இந்திய வெளியுறவுத்துறைஅமைச்சின் அதிகாரி தெரிவித்தார்.

இதற்கு முன்னா இரண்டு குழுக்கள் சிறிலங்கா சென்று தகவல் சேகரித்தது என்றும், இதன்தொடர்ச்சியாகவே இப்போது செல்லவிருந்ததாகவும் அதற்கு சிறிலங்காஅரசு மறுப்புத் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்காவின் நாடுகடத்தல் தொடர்பான சட்டங்கள், புத்தகங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் தேவைப்பட்டால் அவற்றைக் கொழும்பிலுள்ள இந்தியத்தூதுவரகம் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக ஒரு குழு வருகை தர வேண்டியது அவசியமல்ல என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் என்.என். 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையாளரிடம் பேசுகையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இதற்காக இந்தியாவிலிருந்து சட்ட வல்லுனர் குழுவொன்று இங்கு வந்திருந்தால் அவர் இங்குள்ள சட்டத்தரணிகள் மற்றும் சட்டவல்லுனர்களோடு ஆலோசனை நடத்தியிருப்பார் இதன் மூலம் தேவையற்ற பல ஊகங்களுக்கும் இடமேற்பட வழிவகுக்கக் கூடும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இந்திய சட்டவல்லுனர் குழு தற்போதைக்கு வரமாட்டாது எனக் கூறிய இந்தியத் தூதுவர், அதற்கான காரணம் எதையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

## கல்லியன் தீவில் புலிகள் தாக்குதல் காடுகளுக்குள் ராணுவம் ஓட்டம்

### ஒரு போராளி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கல்லியன் தீவில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று காலை கிரிமிச்சை என்னும் இடத்திலிருந்து கல்லியன் தீவு நோக்கி முன்னேறிய இராணுவத்தினர் மீது கல்லியன் தீவில் வைத்து விடுதலைப் புலிகள் இடைமறித்து தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலினால் நிலைகுலைந்த இராணுவத்தினர் அருகிலுள்ள காடுகளுக்குள் புகுந்துவிட்டனர். இராணுவத்திற்கு உதவியாக உலங்குவானூர்தியொன்று தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டது.

விடுதலைப் புலிகளின் இத் தாக்குதலால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த 2ஆம் லெப்டினன்ட் தங்கேஸ் (ஏரம்பு தேவகுமார், குருமன்வெளி, களுவாஞ்சிக்குடி எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பருத்தித்துறை பிரதேச செயலகம் இடமாற்றம்

(பருத்தித்துறை)

புலோலி சமநலச்சேவை நிலையக்கட்டடத்தில் இயங்கி வரும்பருத்தித்துறைப்பிரதேச செயலகம் (உதவி அரச அதிபர் அலுவலகம்) எதிர் வரும் முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் பருத்தித்துறை நகருக்கு செயலகம் முன்னர் இயங்கி வந்த கட்டடத்திற்கு மாற்றப்படவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் திரு சி. முருகேசபிள்ளை அறிவித்துள்ளார். இச் செயலக இடமாற்றத் திறப்பு விழாவிலே யாழ் மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் யாழ் மாவட்டத் திட்டப் பணிப்பாளர் திரு. செ பத்மநாதன், யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு சு. சுவாமிநாதன் ஆகியோர் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கின்றனர். (25)


## கைப்பற்ற

## விண்ணப்ப படிவ பொதிகள் தவறவிடப்பட்டன

யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் அடங்கிய ஆறு பார்சல்களை ஆட்பதிவுத்திணைக்கள அதிகாரிகள் தவறவிட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் செயலக ஊழியர்களினால் கொழும்பு ஆட்பதிவுத்திணைக்களத்திற்கு அனுப்புவதற்கென யாழ்.ப... தமது பார்சல்களை ... கொண்டு செல்லும்வேளை இப்பார்சல்கள் தவறவிட்ட...

## கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில் 13 - 01

தாயக விடிவில் 29 - 06

மேஜரைப் பெற்றுக்கொண்ட யாழ்.அரசாங்க அதிபர் இம் மேஜர் உரிய இடத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று உறுதியளித்தார் தொடர்ந்து கச்சேரி, நல்லூர்வீதி. நாவலர் வீதி யூடாகச்சென்ற ஊர்வலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை அடைந்தது. அங்கேயும் கண்டன மேஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மீண்டும் யாழ் பல்கலைக்கழகத்தை ஊர்வலம் அடைந்தது. (க,ச,பா.75)

...னான் தாக்குதலை ஏற்பனவும் அடங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

முப்படைகளையும் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள், தளத்திலுள்ள படையினருடன் இணைந்து கொள்வதற்காக புறப்பட்டுள்ளதுடன், மேலதிக படையினரும், அவர்களுக்கான கருவிகள் மற்றும் பொருள்கள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு குவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

குண்டுவீச்சு விமானங்கள். அவ்ரோ விமானம், உலங்கு வானூர்திகள் ஆகியன தொடர்ச்சியாக குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்திய வேளை வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு முகாம்களிலிருந்து பலத்த எறிகணைத்தாக்குதல்களும் நிகழ்த்தப்பட்டன

கைப்பற்ற

கைப்பற்ற முடித்தாயினும் விடுதலைப்புலிகளின் பலத்த எதிர்த் தாக்குதல்களால் இப் பகுதியைத் தக்க வைத்துக் கொள்ளமுடியாமற்போனமை தெரிந்ததே என்றும் குறிப்பிட்டது.


## 1ஆம் ஆண்டு வீரஅஞ்சலி



### வீரவேங்கை கோமதி

(கனகலிங்கம் சுடர்ஒளி)

| | |
|---|---|
| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
| 10.02.71 | 11.07.91 |

திதி 30. 06. 92

தாய்நாட்டைக் காப்பதற்கு உன் ஒளியை
இழந்தாயோ சுடரொளி ! உன் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுடர்ஒளி வீதி,
அராலி தெற்கு

இங்ஙனம்
பெற்றோர், சகோதரர்
(2738)



## அழகே!

உன்நினைவாக....

நீ சிந்தியது ரத்தத்துளிகளல்லவே
புதிய புலிகளை பிரசவிக்கும்
உயிரணுக்களல்லவா அவை !

ஆசிரியர்கள், மாணவர்கள்

### யூனிவேர்சல்

கந்தர்மடம் யாழ்.

(சி/4627)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

29. 06. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4628


வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

27-2088, 40-7207, 26-1741, 26-3722, 28-9917, 22-4894, 26-9140, 26-711, 41-7563, 27-5186, 27-5535, 24-7941, 24-375 27-8959, 27-5260, 26-397, 24-2655, CC-32, 24-5029. 70-3757, 25-6321, 37-4518, 86-5978, 25-1540.

27. 06 92 அன்று மன்னார் பாதை ஊடாக வட பகுதிக்குள்ளே வந்த வாகனங்கள்.

தனியார்

26-7225, 26-4882, 27-8877, 27-5792, 42 9326.

| | |
|---|---|
| - 01 - 1966 | - 06 - 1992 |

## மேஜர் அழகன்

(ஈழநாதம் பொறுப்பாளர்)

### செல்வராசா இளங்கோ

மாதா பிதா குருவெல்லாம்
மண்ணுலகில் நீரே ஆகி,
ஆதாரம் எமக்குத் தந்து
அரவணைத்த ஐயன் நீரே;

கண்ணை இமை காப்பதே போல்
காத்திருந்தீர் காலமெல்லாம் - உம்மை
மண்ணைவிட்டுப் பிரித்தெடுக்க
மனம் வந்ததோ காலனுக்கும்.

துடுப்பிழந்த படகைப் போலே
துணையிழந்து வாடுகின்றோம் - நீர்
எடுத்துரைத்த வார்த்தை எல்லாம்
எம் வாழ்வின் வேதங்கள்

கொண்ட இலட்சியக் குன்றிடாதெங்கள்
கொள்கை வீரரின் காலடி மண்ணிலே நின்று
கொண்டொரு சத்தியம் செய்கின்றோம்
நிச்சயம் நாம் நாளை வெல்லுவோம்.

(சி 4628)

ஈழநாதம் பணியாளர்கள்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது